ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| --- | --- |
| திகதி | 2023.12.27 |

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி (மா.மொ.உ.உ)[1] - 2022

## மேல், வட மேல், மத்திய மாகாணங்கள் இலங்கையின் பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தின

மேல் மாகாணம் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கினை 43.4 சதவீதமாக அதிகரித்து 2022 காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் அதன் பிடியினைத் தொடர்ந்தும் வலுப்படுத்தியது. மேல் மாகாணத்தின் வலிமையான பிரசன்னம் அநேகமான பொருளாதார நடவடிக்கைகளில் விசேடமாக பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளில் காணக்கூடியதாகவுள்ளது. அதன்பின்னர் வடமேல் (11.2 சதவீதம்) மற்றும் மத்திய (10.0 சதவீதம்) மாகாணங்கள் பொருளாதாரத்தில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகூடிய பங்குகளைப் பதிவுசெய்துள்ளன.

மேல், வட மத்தி மற்றும் ஊவா மாகாணங்களிலிருந்து பெயரளவு மொ.உ.உற்பத்திகான பங்களிப்புகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்த அதேவேளை வடமத்திய மாகாணத்தின் பங்களிப்பு மாற்றமின்றிக் காணப்பட்டது. மேலும், அனைத்து மாகாணங்களினதும் பெயரளவு மொ.உ.உற்பத்தி ஆண்டுகாலப்பகுதியில் கணிசமாக வளர்ச்சியடைந்தமைக்கு விலைமட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்தது.


**முக்கிய அம்சங்கள்**

*பெயரளவிலான மொ.உ.உற்பத்தி – 2022 ரூ.24,148 பில்.*

*மா.மொ.உ.உற்பத்தி பங்குகள்:*

| | | |
| --- | --- | --- |
| *1ஆவது* | மேல் மாகாணம் | **43.4%** |
| *2ஆவது* | வட மேல் மாகாணம் | **11.2%** |
| *3ஆவது* | மத்திய மாகாணம் | **10.0%** |

**வரைபடம் - 1**
**மொ.உ.உற்பத்தியின் மாகாணப் பங்குகள் - 2022(%)**





## பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு[2]

மாகாண ரீதியான பங்களிப்புக்களைக் கருத்திற்கொள்கையில் வட மேல் மாகாணம் 18.3 சதவீதம் கொண்ட பங்குடன் வேளாண்மை நடவடிக்கைகளுக்கு அதிகூடிய பங்களிப்பினைப் பதிவுசெய்த அதேவேளை, தென் மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே 14.6 சதவீதம் மற்றும் 13.7 சதவீதம் பங்களிப்பு வழங்கின.

அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பாரிய பங்களிப்பாளராக மேல் மாகாணம் விளங்கி 2022இல் 49.2 சதவீதப் பங்கினைப் பதிவுசெய்தது. மேலும், வட மேல் (11.8 சதவீதம்) மற்றும் மத்திய (9.1 சதவீதம்) மாகாணங்கள் மொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான அடுத்த முக்கிய பங்களிப்பாளர்களாகவிருந்தன.

பணிகள் நடவடிக்கைகள் நியதிகளில், மேல் மாகாணம் 45.2 சதவீதம் கொண்ட பங்குடன் தொடர்ந்தும் அதன் ஆதிக்கத்தைச் செலுத்தியதுடன் அதனைத்தொடர்ந்து மத்திய (10.0 சதவீதம்) மற்றும் வட மேல் (9.8 சதவீதம்) மாகாணங்கள் காணப்பட்டன.

**வரைபடம் 2**
**மாகாணங்களின் நடவடிக்கை ரீதியான பங்களிப்பு (%) - 2022**




---


[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது 2015 அடிப்படை ஆண்டின் கீழ் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழ் அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்பட்டது.

[2] 2021 மற்றும் 2022 மாகாண ரீதியான மற்றும் துறைசார் ஒப்பீடுகள் இவ்வெளியீட்டின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

### மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்

அனைத்து மாகாணங்களினதும் பொருளாதாரங்களுக்கு பணிகள் நடவடிக்கைகளே பெரும்பாண்மையாகப் பங்களித்தன. அதற்கமைய, தென் (59.9 சதவீதம்) மற்றும் மேல் (58.5 சதவீதம்) மாகாணங்கள் அதிகூடிய பணிகள் பங்களிப்புக்களைப் பதிவுசெய்தன. கைத்தொழில் நடவடிக்கைகள் நோக்கில், அதிகூடிய செறிவு மேல் மாகாணத்தில் (34.4 சதவீதம்) அவதானிக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து வடமேல் மாகாணம் (32.0 சதவீதம்) காணப்பட்டது. அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளுக்கான பங்களிப்பு ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு (17.2 சதவீதம்) மற்றும் ஊவா (15.5 சதவீதம்) மாகாணங்களில் உயர்வாகவிருந்தது.

**அட்டவணை 3**
**மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள் - 2022**



இணைப்பு

அட்டவணை 1
மாகாண ரீதியான பெயரளவிலான மொ.உ.உற்பத்தி (அடிப்படை ஆண்டு 2015)

| மாகாணம் | 2021(அ) | | 2022(ஆ) | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) |
| மத்திய | 1,823,459 | 10.4 | 2,423,253 | 10.0 |
| கிழக்கு | 963,957 | 5.5 | 1,248,306 | 5.2 |
| வட மத்திய | 878,248 | 5.0 | 1,209,771 | 5.0 |
| வட மேல் | 1,955,294 | 11.1 | 2,706,227 | 11.2 |
| வடக்கு | 752,276 | 4.3 | 985,139 | 4.1 |
| சப்பிரகமுவ | 1,269,383 | 7.2 | 1,725,853 | 7.1 |
| தென் | 1,614,660 | 9.2 | 2,199,791 | 9.1 |
| ஊவா | 848,092 | 4.8 | 1,176,221 | 4.9 |
| மேல் | 7,494,822 | 42.6 | 10,473,166 | 43.4 |
| **இலங்கை** | **17,600,191** | **100.0** | **24,147,726** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2
மா.மொ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு 2021 மற்றும் 2022

| மாகாணம் | வேளாண்மை (%) | | கைத்தொழில் (%) | | பணிகள் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021(அ) | 2022(ஆ) | 2021(அ) | 2022(ஆ) | 2021(அ) | 2022(ஆ) |
| மத்திய | 13.6 | 13.7 | 9.9 | 9.1 | 10.1 | 10.0 |
| கிழக்கு | 8.9 | 10.2 | 5.1 | 4.2 | 5.1 | 4.9 |
| வட மத்திய | 10.5 | 8.4 | 3.6 | 4.2 | 4.9 | 4.9 |
| வட மேல் | 17.4 | 18.3 | 11.8 | 11.8 | 9.7 | 9.8 |
| வடக்கு | 7.2 | 6.2 | 4.2 | 4.3 | 3.9 | 3.6 |
| சப்பிரகமுவ | 8.2 | 8.7 | 7.1 | 6.7 | 7.1 | 7.1 |
| தென் | 15.5 | 14.6 | 6.4 | 6.4 | 9.6 | 9.7 |
| ஊவா | 8.5 | 8.6 | 4.1 | 4.0 | 4.6 | 4.7 |
| மேல் | 10.2 | 11.4 | 47.8 | 49.2 | 44.9 | 45.2 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்